முருகப்பெருமான் துணை

**மகான் ஆண்டாள் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.04.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. பண்பான மக்கள் நிறைந்த
பரோபகாரமிக்க சேவை வழி
இன்பமென மக்களெல்லாம் இணைய
எல்லோரும் சமம் எனும் தத்துவம்
2. தத்துவம் அருளி வழிநடத்தும்
தவராஜனே உமை போற்றி
இத்தரையில் சுபகிருது சேல் திங்கள்
இருபானாற் திகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் **26** ம் நாள், **09.04.2023,** ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் அனுகூல ஆசியை
வழங்குவேன் ஆண்டாள் யானும்
சோரம்போகா மக்கள் வாழ்வு
சுபிட்சமும் வளமும் கண்டிட
4. கண்டிட கருணைபட அருளும்
கந்தப்பெருமான் அவதார ஞானி
தொண்டுடன் கூடிய சேவையை
தேசமெல்லாம் நிரப்பி வருக
5. வருகவே தொண்டராகக் கலந்து
வையகமக்கள் தொடர்ந்துவர
தரும வழிகளை தலையாய சேவையாக
தவராஜன் சொன்ன வண்ணம்
6. வண்ணமதாய் மக்கள் தொடர
வருங்காலம் ஆற்றல் மிக்க
எண்ணம் தூய்மைபட இயங்கும்
இணையில்லா ஞானவான்களாகத் தேறி
7. தேறியே நிலைகள் உயர்வர்
தேசநலம் காக்கும் வண்ணம்
மாறுதல் புரிந்து சிறப்பர்
மாதவசி அரங்கன் ஞான வழி

8. ஞானவழி மரணம் வெல்லும்
ஞானிகள் சக்திதரும் உயர்வழி
தானாக உலகோர் இணைந்து
தக்க ஞான தீட்சை ஏற்று

9. ஏற்றுமே முழு சரணாகதிபட
எல்லாம் குருவருள் செயலே என
ஆற்றல்பட சேவை ஆற்றிட
அகிலத்தில் ஞானிகள் படையாக

10. ஆகவே மாற்றம் கண்டு
அழியாமை எனும் சக்தியாக
செகமெல்லாம் நிரம்பி இனிதே
சித்திகள் நிறைந்த புவியாக

11. ஆகவே அகிலம் மாற்றமதும்
ஆறுமுக அரங்கனால் கண்டு
யுகமே ஞானயுகம் ஆகும்
உரைத்திட்ட அனுகூல ஆசி முற்றே

—சுபம்—